# தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்

35வி, தாலுகா அலுவலக சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015
தொலைபேசி எண் : 044 - 2230 0190, மின்னஞ்சல் : atnhe.chn@gmail.com
atnhe.chn15@gmail.com
வலைதளம் : www.tnhighwaysengineers.com

| தலைவர் | பொதுச்செயலாளர் | பொருளாளர் |
| --- | --- | --- |
| **பொறிஞர் அ. வேங்கடாசலம், எம்.இ.,** | **பொறிஞர் ஆர். தீபக், எம்.இ.,** | **பொறிஞர் சு. கண்ணன், எம்.இ.,** |
| கைபேசி : 77080 24234 | கைபேசி : 89395 60470 | கைபேசி : 94437 11245 |


கடிதம் எண் 007/ ஊதியக் குழு / 2017 - 5 நாள் 13.06.2018

பெறுநர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009

ஐயா,

பொருள்: தமிழ்நாடு திருத்திய ஊதிய விகித விதிகள், 2017 - அரசாணை எண் 328 - சென்னை உயர்நீதி மன்றத்தால் இரத்துச் செய்யப்பட்டது - நெடுஞ்சாலைத்துறை உதவிப் பொறியாளர்கள், உதவிக் கோட்டப் பொறியாளர்கள், கோட்டப் பொறியாளர்கள் ஆகியோருக்கு ஒரு நபர் குழு, 2010 - ஆல் பரிந்துரைக்கப்பட்டுத் தற்பொழுது பெற்று வரும் ஊதியத்திலிருந்து கணக்கிட்டுப் புதிய ஊதியம் நிர்ணயம் செய்வது தொடர்பாக - வேண்டுகோள்

பார்வை: திரு.என்.சுரேஷ்குமார் மற்றும் பலர் (எதிர்) தமிழ்நாடு அரசு வழக்கில் 04.06.2018 அன்று மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பு

வணக்கம்!

ஏழாவது ஊதியக் குழு பரிந்துரைகளின் அடிப்படையில் மத்திய அரசுப் பணியாளர்களுக்கு ஊதிய மாற்றம் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு ஊதிய மாற்றம் செய்வதற்கு முன்வந்தமைக்கு நாங்கள் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதற்காக அமைக்கப்பட்ட அலுவல் குழுவின் முன் நாங்கள் முன்வைத்த கோரிக்கை விவரங்களைச் சுருக்கமாக இங்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த ஊதிய மாற்றத்திற்கு அமைக்கப்பட்ட அலுவல் குழு பரிந்துரைகள், அவற்றால் எழுந்த முரண்பாடுகள், திரு.ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் அமைந்த ஒரு நபர் குழு வழங்கிய நியாயமான பரிந்துரை, தர ஊதியம் குறைக்கப்பட்டது, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் தடை ஆணை வழங்கியது, அரசாணை எண் 242-ல் ஊதியக்கட்டு மற்றும் தர ஊதியம் ஆகியவை குறைக்கப்பட்டது, மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தின் இறுதித் தீர்ப்பு, மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடுகள் என்று அனைத்து விவரங்களையும் விளக்கமாக எடுத்துரைத்து எங்களுக்கு நியாயமாக இன்று பெற்று வருகிற ஊதியத்திலிருந்து புதிய ஊதிய விகிதத்தினை, ஊதிய அணி (Pay Matrix)யிலிருந்து கணக்கிடுவதற்குப் பரிந்துரைகள் வழங்குமாறு அலுவல் குழுவினைக் கேட்டுக் கொண்டோம்.

அனைத்து விவரங்களையும் எங்கள் தரப்பு நியாயங்களுடன் நாங்கள் விரிவாகத் தெரிவித்திருந்தபொழுதும் அலுவல் குழு கீழ்க்கண்டவாறு பரிந்துரை செய்தது.

"உச்ச நீதிமன்றத்திலும் உயர்நீதி மன்றத்திலும் வழக்குகள் நிலுவையில் இருப்பதைக் கணக்கிற் கொண்டு, நீதி மன்ற ஆணைகளின் அடிப்படையில் கூடுதல் ஊதியம் பெற்று வரும் சில வகைப் பணியாளர்களுடைய ஊதிய விகிதங்கள், ஊதிய குறை தீர் குழு, 2012-ன் பரிந்துரைகளுக்கேற்ப திருத்தம் செய்யப்பட்ட ஊதிய விகிதங்களின் அடிப்படையில் மாற்றம் செய்யப்படவேண்டும். அந்த வகைப் பணியாளர்கள், மேற்கண்டவாறு ஊதிய மாற்றம் செய்து கொள்ள விருப்பம் தெரிவிக்கலாம்; அல்லது தற்பொழுது பெற்று வரும் ஊதியத்தைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ளலாம். இவற்றில் எது கூடுதல் பணப்பயனைத் தருமோ அதைத் தேர்வு செய்யலாம். எந்தத் தேர்வினைச் செய்தாலும், நீதி மன்றங்களின் இறுதித் தீர்ப்புகளுக்கு அந்த தேர்வு உட்பட்டது என்றும் பரிந்துரைக்கப்படுகிறது".

மேற்கண்ட பரிந்துரைகளின் அடிப்படையில், அரசாணை எண் 328, நிதி (ஊதியக் குழு)த் துறை, நாள் 31.10.2017 வெளியிடப்பட்டது.

"அரசாணை எண் 242-ன்படி குறைக்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் புதிய ஊதியம் நிர்ணயம் செய்து கொள்ளலாம்; அல்லது தற்பொழுது பெற்று வரும் ஊதியத்தினைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ளலாம்" என்று இரண்டு வழிகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று அரசாணையில் குறிப்பிடப்பட்டது.

அவ்வரசாணை எங்கள் ஊதியத்தினை வெகுவாகக் குறைப்பதாகவும் 7வது ஊதியக் குழு பயன்களை நாங்கள் பெறாதவாறும் அமைந்ததால், நாங்கள் மாண்புமிகு உயர்நீதி மன்றத்தில், வழக்கு எண் 770/2018 மூலம் முறையீடு செய்தோம். எங்கள் மனுவில் "அரசாணை எண் 328-ஐ ரத்துச் செய்யுமாறும் அரசாணை எண் 303-ல் அனைத்து அரசுப் பணியாளர்களுக்கும் வழங்கியது போன்று எங்களுக்கு ஊதிய மாற்றம் செய்து பிற பயன்களையும் வழங்க ஆணையிடுமாறும்" முறையிட்டிருந்தோம். 04.06.2018 அன்று மாண்புமிகு உயர்நீதி மன்றம் அரசாணை எண் 328-ஐ ரத்துச் செய்தும் எங்கள் வழக்கினை ஏற்று ஊதிய மாற்றம் செய்திடுமாறும் தீர்ப்பு வழங்கியுள்ளது.

எனவே, அனைத்துப் பணியாளர்களுக்கும் வழங்கியுள்ள ஊதிய மாற்றத்தினை எங்களுக்கு நியாயமாக வழங்கிடவும் ஒரு நபர் குழு, 2010 அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் இன்று நாங்கள் பெற்று வரும் ஊதியத்தின் அடிப்படையில் புதிய ஊதியம் நிர்ணயம் செய்திடவும் ஆணைகளை வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலும், எங்களுக்குக் கீழே பணிபுரிகிறவர்களை விடவும் குறைவாக ஊதியம் பெறுகிற சூழ்நிலையில் கடந்த 8 மாதங்களாக நாங்கள் பணிபுரிந்து வருவதால் விரைவில் ஆணை வழங்குமாறு மிகவும் பணிவுடன் வேண்டிக் கொள்கிறோம்.

நன்றி,

தங்கள் உண்மையுள்ள,

13/6/18

(பொதுச் செயலாளர்)